செ.கு.எண் :39 நாள் : 23.04.2022

**மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்திற்கு தரவேண்டிய 796 மெகாவாட் மின்சாரம் கடந்த இரண்டு நாட்களாக வழங்கப்படவில்லை – மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் தகவல்**

22.04.2022 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக சென்னை, தலைமை அலுவலகத்தில் செயல்பட்டுவரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம், சென்னை மாநகர மின் கட்டுப்பாட்டு மையம் மற்றும் 24 மணி நேர மாநில மின் நுகர்வோர் சேவை மையம் மின்னகம் ஆகியவற்றை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் திரு. எஸ்.சண்முகம், இயக்குநர்கள், தலைமை பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் இருந்தனர்.

பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது :–

இதுவரை தமிழகத்தில் இல்லாத ஒரு நிகழ்வாக கடந்த 29.03.2022 அன்று உச்சபட்ச மின்நுகர்வு 17,196 மெகாவாட் அளவிற்க்கு தேவை ஏற்பட்டது. மின்சார வாரியம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளின் படி 17,196 மெகாவாட் நுகர்வு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டது. கடந்த ஆண்டுகளைப் போல் இந்த ஆண்டு கோடை காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி இருந்தார்கள். அதன்படி, ஏப்ரல் மற்றும் மே மாதத்திற்கான கூடுதலாகத் தேவைப்படுகின்ற 3,000 மெகாவாட் மின்சாரத்திற்கு டெண்டர் முறையில் கொள்முதல் செய்து மின்சாரம் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

நம்முடைய அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி முழுவதுமாக கிடைக்கப்பெறவில்லை. நமக்கு நாளொன்றுக்கு 72,000 டன் நிலக்கரி தேவைப்படுகிறது. ஆனால், 48,000 டன் முதல் 50,000 டன் வரை தான் நமக்கு நிலக்கரிகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, தமிழகத்திற்கு தேவையான அளவிற்கு நிலக்கரியை முழுவதுமாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டெல்லி சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்தினார். அதேபோல் ஒரு நாளைக்கு 22 ரேக் நிலக்கரி கொண்டுவருவதற்கான ஒதுக்கீடு செய்வதற்கு பதிலாக ஒரு நாளைக்கு 14 ரேக் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே, நிலக்கரிகள் இருந்தாலும், அதை கொண்டுவருவதற்கான ரேக்குகள் ஒதுக்கீடுகள் இல்லை. எனவே, இரண்டு வகையிலும் அதாவது 72,000 டன் நிலக்கரி ஒதுக்கீடு, 22 ரேக்குகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் நேரில் வலியுறுத்தினார். அதற்கு முன்னதாகவும் கடிதம் எழுதினார்கள். இன்றும், இதனை வலியுறுத்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதமும் எழுதியிருக்கிறார்கள்.

நமக்கு முழுவதுமாக தேவைப்படும் நிலக்கரிகள் கையிருப்பு இல்லாத சூழ்நிலையிலும் கூட மின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் நிலக்கரியின் விலை உயர்ந்துள்ளது என அனைவருக்கும் அறிந்தது. எனவே, இந்த ஓராண்டில் விலை உயர்வின் காரணமாக நாம் நிலக்கரி இறக்குமதி செய்யவில்லை. ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தேவையான நிலக்கரியின் பற்றாக்குறையைப் போக்குவதற்காக 2 மாதங்களுக்கு மட்டும் கணக்கிட்டு 4,80,000 டன் நிலக்கரி கொள்முதல் செய்வதற்கு, ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கப்பட்டது. அதில் நான்கு நிறுவனங்கள் பங்கு பெற்று 137 டாலர் அளவிற்கு இறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்நிறுவனங்களுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டு விரைவில் அந்த நிலக்கரியை இறக்குமதி செய்து உற்பத்திக்கு பயன்படுத்த இருக்கின்றோம்.

இரண்டு தினங்களுக்கு முன்பாக இரவில் ஏற்பட்ட மின் விநியோகத்தின் நிறுத்தம் என்பது 796 மெகாவாட் அளவிற்கு மத்திய தொகுப்பிலிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய மின்சாரம் தடைப்பட்டுவிட்டது. அதனால் தான் பல்வேறு பகுதிகளில் மின் விநியோகத்தில் சிரமங்கள் ஏற்பட்டன. இப்பொழுது வரை மத்திய தொகுப்பிலிருந்து பெறப்பட வேண்டிய 796 மெகாவாட் மின்சாரம் மத்திய தொகுப்பிலிருந்து பெற முடியவில்லை. இருந்தாலும்கூட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை கண்காணித்து, சீரான மின் விநியோகத்தினை வழங்கிட பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கினார்கள்.

மத்திய தொகுப்பிலிருந்து வர வேண்டிய 796 மெகாவாட் மின்சாரம் பெறப்படாத சூழ்நிலையில், இந்த பற்றாக்குறையை போக்க 550 மெகா வாட் அளவிற்கு மின்சாரம் பரிமாற்ற முறையில் வேறு மாநிலங்களிலிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. நாம் இப்பொழுது பெறப்படுகின்ற மின்சாரத்திற்கு விலை நிர்ணயித்து தொகை வழங்கப்படுவதில்லை. வரக்கூடிய ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் நம்முடைய உற்பத்தியின் உபரியில் இருந்து, அந்தக் காலக்கட்டத்தில் நாம் இப்பொழுது பெறப்பட்டிருக்கிற மின்சாரத்திற்கு இணையாக வழங்குகின்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் 550 மெகவாட் பெறக்கூடிய பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. நேற்று அல்லது நேற்று முன்தினம், இன்று ஏற்பட்டிருக்கிற இந்த மின்சார விநியோக தடை நாளை முழுவதுமாக சீரமைக்கக் கூடிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5 நாட்களாக தூத்துக்குடி அனல் மின் நிலையங்களில் உற்பத்தியே செய்யப்படவில்லை என்று கூறி இருக்கிறார்கள். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை பொருத்தவரை 19.04.2022 அன்று 11.734 மில்லியன் யூனிட்டும், 20.04.2022 ஆம் தேதி அன்றைக்கு 13.207 மில்லியன் யூனிட்டும், 21.04.2022 ஆம் தேதி 13.963 மில்லியன் யூனிட்டும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இன்று 22.04.2022ஆம் தேதி 15.74 மில்லியன் யூனிட்டும் உற்பத்தி

செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை பொருத்தவரை 5 நாட்களாக தொடர்ந்து உற்பத்தி நடைபெற்று வருகிறது. அதற்கு தேவையான நிலக்கரி 5 நாட்களுக்கு அங்கே இருப்பு இருந்தும் உற்பத்தி செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டினை கூறியுள்ளார்கள். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை பொருத்தவரைக்கும் ஒரு நாளைக்கு 22,000 டன் நிலக்கரி தேவை அந்த 22,000 டன் நிலக்கரியை எடுத்துக் கொள்ள வேண்டிய காலக்கட்டங்களில் 22.04.2022ஆம் தேதி அன்றைக்கு இருந்த கையிருப்பு 21,335. ஒரு நாளைக்கு தேவையான நிலக்கரிகள் தான் இருப்பு இருக்கின்றன இருக்கின்ற நிலக்கரியினைக் கொண்டு முழுவதுமாக பயன்படுத்தி உற்பத்தி செய்து சீராக மின் விநியோக நடவடிக்கைகளை வாரியம் எடுத்திருக்கின்றன. 5 நாட்கள் நிலக்கரியை வைத்துக்கொண்டு செயற்கையான ஒரு தோற்றத்தை உருவாக்கி அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்க வேண்டும் என்பதற்கான ஒரு நிலை எடுக்கப்பட்டதாக ஒரு பொய்யான குற்றச்சாட்டை மக்கள் மத்தியில் ஒரு போலி விளம்பரத்திற்காக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

மேலும், செயற்கையாக இந்திய மின் சந்தை மூலமாக மின்சாரத்தை கொள்முதல் செய்வதாக ஒரு தவறான கருத்தினையும் சொல்லி இருக்கிறார்கள்.

அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவதாக ஒரு கருத்தை சொல்லி இருக்கிறார்கள். இந்திய மின் சந்தையை பொறுத்தவரை யார் அதில் விற்பனை செய்கிறார்கள், யார் அதை வாங்குகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. நாம் அந்த தொகையினை எங்கே கொடுக்கிறோம் என்பதும் யாருக்கும் தெரியாது. இந்த மின் பகிர்மான கழகத்திற்குதான் தொகையினை கொடுக்க முடியும் தனியாருக்கு கொடுக்க முடியாது. நாம் கொடுக்கனும். விற்பனை செய்ததையோ, கொள்முதல் செய்ததையோ எந்த மாநிலமும் தெரிந்து கொள்ள முடியாது. தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும்மில்லை இதுதான் நடைமுறை. எல்லா மாநிலங்களிலும் இந்த நடைமுறையைதான் கடைபிடித்து வருகிறார்கள். பொதுவான இந்த இந்திய மின் சந்தை நடைமுறைகளைப்

பற்றிக்கூட தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல். ஒரு தவறான குற்றச்சாட்டினை சொல்லியிருக்கிறார்கள். இந்தியா முழுவதும் போதிய நிலக்கரி கையிருப்பு இல்லாதால் எத்தனை மாநிலங்களில் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். குஜராத்தில் சுழற்சி முறையில் மின் வெட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது, கர்நாடகாவில் மின் விநியோகத்திற்கு போதுமான ரேக் இல்லாமல் மின் உற்பத்தி இல்லாத சூழலில் மின்வெட்டு அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. தமிழ்நாட்டை பொறுத்தவரை 2016 இல் இருந்து 2021 வரை 68 முறை இதுபோன்ற மின் தடை சூழல் நடைபெற்றிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற இந்த ஓராண்டில் ஒரே ஒரு முறைதான் இந்த நிகழ்வு ஏற்பட்டுள்ளது. மத்திய தொகுப்பிலிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய மின்சாரம் தடைபட்ட காரணத்தினால் தான் இந்நிலை ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மின்சார வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, ஓராண்டிற்குள் 22,000 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன, 8,905 மின்மாற்றி அமைக்கும் பணியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இவை இல்லாமல் சிறப்பு நேர்வாக புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூபாய் 2,200 கோடி அளவிற்கு வட்டி குறைப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கை காரணமாக மின்சார வாரியத்தில் சேமிப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றன.

24 மணி நேர மாநில மின் நுகர்வோர் சேவை மையம் மின்னகத்தை பொறுத்தவரை இதுவரை 7,75,000 புகார்கள் பெறப்பட்டு, ஏறக்குறைய 99 சதவீத புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மக்களுக்கான அரசின் மீது நம்பிக்கை வைத்து, மின்னகத்தை தொடர்பு கொண்டால் தீர்வுகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அதற்கான தீர்வுகளை பெற்று பயனடைகிறார்கள்.

இந்தியா முழுவதும் இந்த பாதிப்பு ஏற்பட்டு மின் வெட்டுக்கள் அறிவிக்கப்பட்டு மின் தடை நடைமுறையில் உள்ள இந்த காலகட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக

தமிழகத்தில் மின் வெட்டே இல்லை என்ற நிலையில் சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. இந்த இரண்டு நாட்கள் ஏற்பட்ட சூழலுக்கு காரணம் மத்திய தொகுப்பில் கிடைக்க வேண்டிய மின்சாரத்தில் தடையால் தான்.

கடந்த காலங்களில் மின் தடை என்பது 2016ல் இருந்து 2020 வரை 68 முறை ஏற்பட்டுள்ளது. இந்த 68 முறையும் எந்தெந்த தேதிகளில் எற்பட்டது என்ற விவரம் ஆண்டு வாரியாக பட்டியலில் உள்ளது. அதன்படி, 2016–ல் 05 முறையும், 2017–ல் 13 முறையும், 2018–ல் 16 முறையும், 2019–ல் 9 முறையும், 2020–ல் 8 முறையும் பின்னர் 17 முறையும் இதுபோன்ற சூழல் ஏற்பட்டுள்ளது. அந்த கால கட்டங்களில் நிலக்கரி பற்றாக்குறை இல்லை, அதேபோல் ரேக் ஒதுக்கீட்டிலும் குறைந்ததாக இல்லை. அனல் மின் நிலைய உற்பத்தி 15,553 மில்லியன் யூனிட் என்பது 2020ல் 20,300 மில்லியன் யூனிட்டாக உயர்த்தப்பட்டு ஏறத்தாழ 4,800 மில்லியன் யூனிட் 31 விழுக்காடு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2020–2021ஆம் ஆண்டைவிட 2021–2022 ஆம் ஆண்டில் அனல் மின் நிலையங்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

சோலார் உற்பத்தியை பொறுத்தவரை நாட்டிலேயே தமிழகம் 4–வது இடத்தில் உள்ளது. 10 ஆண்டுகளில் தமிழகத்தில் 20,000 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தி அதிகரிக்கப்படும். கடந்த ஆண்டு 4.000 மெகாவாட் உற்பத்தி செய்ய திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டும் அதிகரிக்க பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பொருத்தவரை மக்களின் மின் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும், உற்பத்தி திட்டங்களை அதிகரிக்க வேண்டும் என்பதே இலக்காக கொண்டு, அதற்கான பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் ஏற்படும் கூடுதல் தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிலக்கரி பற்றாக்குறையை சமாளிக்க 4,80,000 டன் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான டெண்டர் போடப்பட்டு அதற்கான உத்தரவு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

மக்களிடம் வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் நம்முடைய மின் தேவையை பூர்த்தி செய்ய அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும். மத்திய தொகுப்பிலிருந்து நம்முடைய வரவின் வரவேண்டிய 796 மெகாவாட் மின்சார தடையினாலும், நமக்கு தேவையான நிலக்கரியை கொடுக்க முடியாததாலும், நமக்கு தேவையான ரேக் ஒதுக்ககூடிய சூழ்நிலையாலும் இந்நிலை நமக்கு ஏற்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இந்நிலைமையை சரி செய்வதற்கான மாற்று ஏற்பாடுகள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செய்யப்பட்டுள்ளது.

ஓரிரு தினங்களுக்குள் தேவையான மின்சாரத்தை பெற்று முழுவதுமாக விநியோகம் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நமக்கு மத்திய தொகுப்பிலிருந்து கிடைக்க கூடிய 800 மெகாவாட் மின்சாரத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு ஒட்டு மொத்தமாக எல்லா மாநிலங்களிலும் மின்சாரத்தை கொள்முதல் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன. ஓரிரு நாட்களுக்குள் தமிழகத்தில் மின்தடை, மின்வெட்டு சரி செய்யப்படும். முழு மின் உற்பத்தியை அதிகரித்து மின் விநியோகம் சீரான முறையில் வழங்கப்படும். 17,500 மெகாவாட் வரும் என கணக்கிடப்பட்டு அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். காற்றாலைகளில் கடந்த ஆண்டை விட மின்சாரம் 4,800 மில்லியன் யூனிட் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு இருக்கிறது.

இவ்வாறு மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in